பக்கங்கள்:-21

# காலை முரசு

## 'நவ. 21' நுகேகொடையில் மேடையேறவேமாட்டோம்

### சஜித் அணி திட்டவட்டம்



தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக எதிர் வரும் 21ஆம் திகதி நுகே கொடையில் 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 15 | சனிக்கிழமை | 01.11.2025 | அதிர்வு 093

# யாழ். பல்கலையில் மீட்கப்பட்ட ஆயுதங்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முற்பட்டவை?



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மீட கப்பட்ட துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் சுமார் 20 வருடங்களுக்கு முற்பட்டவை என்று சந் தேகிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நூலகத்தின் மேற்கூரையில் இருந்து ரி – 56 ரக 06



## கூட்டு எதிரணியினரின் பேரணி ஊடாக

# இந்த அரசாங்கத்தை கவிழ்க்கவே முடியாது!

## அமைச்சர் லால்காந்த சூளுரை

"இந்த அரசு மூன்றிலிரண்டு பெரும்பான் மைப் பலமிக்க மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டது. எனவே, கூட்டு எதிரணியி னரின் பேரணி ஊடாக இந்த அரசைக் கவிழ்க்க முடியாது."

- இவ்வாறு அமைச்சர் கே.டி.லால்காந்த தெரவித்தார். 05



# மாகாணத் தேர்தல் நடத்தப்படும் தினமே அநுர அரசாங்கத்தின் இறுதி நாளும் ஆகும்




## இப்படிச் சொல்கின்றது சஜித் அணி

"முடிந்தால் மாகாண சபைத் தேர் தலை நடத்திக் காட்டுமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம். இனியும் மாகாண சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்த முடி யாது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப் படும் தினமே இந்த அரசின் இறுதித் தினமும் ஆகும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எதுவுமே தெரியாத அமைச்சர்கள் குழுவொன்று தற்போது நாடாளுமன்றத் தில் அமர்ந்திருக்கின்றது. அதனை மக்க ளும் உணர 06




இரண்டு வழக்குகள் குறித்து இன்று விவ ரிப்பேன் என்று நேற்று இப்பத்தியில் குறிப் பிட்டு இருந்தேன்.

அவற்றில் ஒன்று நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன, நீதியரசர்கள் குமுதினி விக்ரமசிங்க, மஹிந்த சமயவர்த்தன ஆகியோர் முன்னி லையில் எடுத்துக் கொள்ளப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு.

யாழ்ப்பாணத்தில் பெண் சட்டத்தரணி ஒருவ ரின் வீட்டைப் பொலிஸார் சட்ட முறையற்ற விதத் தில் சோதனையிட்டமை மற்றும் அவரைக் கைது செய்தமை போன்றவற்றுக்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

முறைகேடான வகையில் சொத்து ஆவண மாற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் விசேட குற்றப் புலனாய்வுப் பிரி வினரால் இந்தச் சட்டத்தரணிக்கு எதிராக நடவ டிக்கை எடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

மனுதாரர் தரப்பில் நீதிமன்றில் 06

# குருந்தூர்மலையைக் கையகப்படுத்துவதற்கு தொல்பொருள் திணைக்களம் பெரும்மோசடி

## பௌத்த சின்னங்களை அடாத்தாகப் போட்டு சுத்துமாத்து மிஹிந்தலை விகாராதிபதி சாணக்கியனிடம் தெரிவிப்பு




தொல்பொருள் திணைக்களத்தில் பிரதி அத்தியட்சகராகச் செயல்பட்ட ஜயதிலக்க என்னும் நபர் பௌத்த மதத்தோடு சம்பந்தப்பட்ட சின்னங்களை மூடைகளில் கொண்டுவந்து குருந்தூர் மலையைச் சுற்றியுள்ள நிலங்களிலும் வயல் நிலங்களிலும் வீசி, பின்னர் அதன் மூலம் அவற்றை தொல்பொருள் நிலங்களாக அடையாளப்படுத்தி, ஆவணப்படுத்தியே அந்தப் பிரதேசம் தொல்பொருள் திணைக்களத்தினால் கையகப்படுத்தச் செய்தார்.

மிஹிந்தலை பௌத்த விஹாராதிபதி இந்த விடயத்தைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு எழுத்தில் முறைப்பாடாக அறிவித்தமையோடு நேற்று சாணக்கியன் எம்.பியிடம் அந்த விடயத்தைத் தெரிவித்து அது பற்றிய தமது முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதியையும் ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பில் சாணக்கியன் எம்.பி. நேற்றுத் தெரிவித்தவை வருமாறு:-

இன்றைய தினம் (வெள்ளியன்று) மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி போகும் வழியில் முக்கியமாக மிஹிந்தலை என்னும் பிரதேசத்திலே இருக்கும் பௌத்த விஹாராதிபதியின் விசேட அழைப்பின் பெயரில் அவரைச் சந்தித்தேன். அதற்கான காரணம், குருந்தூர் மலையிலே நடந்த ஒரு மிக முக்கியமான ஒரு விடயத்தைப் பற்றி தெரிவிப்பதற்கு ஆகும். குருந்தூர் மலை சம்பந்தமாக உங்கள் அனைவருக்கும் தெரியும். அதிலே ஒரு விகாரை கட்டப்பட்டது அண்மித்த காணிகள் மற்றும் நிலங்கள் தனிநபர்களினால் கையகப்படுத்தப்பட்டன். இதற்கான வழக்கினை எமது கட்சியினை சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இதற்கான வழக்கினை வாதாடி இருந்தார்.

விஹாராதிபதி எனக்கு எழுத்து மூலமான ஓர் கடிதத்தை வழங்கி இருந்தார். அத்ய் அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு 21.07.2025ன்று வழங்கிய முறைப்பாட்டின் பிரதி ஆகும். அதில் அவர் பெயர் குறிப்பிட்டு தொல்பொருள் திணைக்களத்தில் பிரதி அத்தியட்சகராக செயல்பட்ட ஜயதிலக்க என்னும் நபர் பௌத்த மதத்தோடு சம்பந்தப்பட்ட சின்னங்களை மூடைகளில் கொண்டு வந்து, சுற்றியுள்ள நிலங்களிலும் வயல் நிலங்களில் வீசி, அவற்றை தொல்பொருள் நிலங்களாக ஆவணப்படுத்தி, தொல்பொருள் திணைக்களம் அந்தப் பிரதேசத்தைக் கையப்படுதியதைத் தெரியப்படுத்தியிருந்தார்.

பௌத்த துறவியான இவர் இவ்விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது வரவேற்கத்தக்க விடயம். இவ் ஆவணத்தை என்னிடம் தருவதற்காக என்னை அழைத்திருந்தார்.

அத்துடன் அவருடனான சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலை தொடர்ந்து, கோரிக்கை ஒன்றினையும் முன்வைத்திருந்தார். இவ் நாட்டில் அனைத்து மக்களும் மும்மொழிகளான தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் என்பவற்றை படிப்பிப்பதற்கான ஓர் சட்டமூலம் கொண்டுவந்து அனைவரையும் படிப்பிக்க வேண்டும் என்பதனை தெரிவித்திருந்தார். - என்றார்.









**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை-2025**

“மரங்களை நாட்டுவதற்கான மிகச்சிறந்த காலம் இருபது வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.”
*- சீனப் பழமொழி -*





## ‘கணேமுல்ல சஞ்சீவ’ படுகொலை;

# செவ்வந்திக்கு உதவிய பெண் சட்டத்தரணிக்கு 90 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவல் உத்தரவு!

பாதாக உலகக் குழு உறுப்பினர் “கணேமுல்ல சஞ்சீவ” படுகொலையுடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்திக் குத் துப்பாக்கியை மறைத்து வைக்க தண்டனைச் சட்டக்கோவை நூலை வழங் கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் சட்டத்தரணியை மேலும் 90 நாள்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யவுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகா ரிகள், கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ் போதரகமவுக்கு நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளனர்.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகா ரிகள், மேற்படி பெண் சட்டத்தரணி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந் துள்ளார். எனவே, “கெஹெல்பத்தர பத்மே” என்பவர் இந்தச் சட்டத்தரணிக் குப் பணம் வழங்கியுள்ளரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெ டுக்கப்படவுள்ளன என்று நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர்.

அத்துடன், இந்தப் பெண் சட்டத் தரணியின் வங்கிக் கணக்குகளை சோத னையிட்டு அவர் குற்றச் செயல்க ளுக்கு உடந்தையாக இருந்துள்ளாரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் குற்றப் புலனாய்வு த் ணைக்கள அதிகா ரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, புதுக்கடை நீதிமன் றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த “கணேமுல்ல சஞ்சீவ” என்பவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தலை மறைவாக இருந்த நிலையில் நேபாளத் தில் வைத்து கடந்த ஒக்டோபர் மாதம் கைது செய்யப்பட்டு பின்னர் நாடு கடத் தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இஷாரா செவ்வந்தியி டம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப் படையில், பிஸ்டல் ரக துப்பாக்கியை மறைத்து வைப்பதற்குத் தண்டனைச் சட்டக்கோவை நூலை வழங்கினார் எனக் கூறப்படும் பெண் சட்டத்தரணி கடவத்தை பிரதேசத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் கீழ் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள்களுடன் ஒரே நாளில் 971 பேர் கைது!

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நாடளா விய ரீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற் கொள்ளப்பட்ட போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் போது 971 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது 735 கிராம் 9 மில்லிகிராம் ஹெரோயின், 2 கிலோகிராம் 422 கிராம் 13 மில்லிகிராம் ஐஸ், 603 கிராம் 84 மில்லிகிராம் கஞ்சா, 97 ஆயிரத்து 283 கிராம் கஞ்சா செடிகள், ஒரு கிராம் 3 மில்லிகிராம் குஷ்ரக போதைப்பொருள், 27 கிராம் 3 மில்லிகிராம் ஹஸீஸ் ரக போதைப்பொருள், 1305 போதை மாத்திரைகள் மற்றும் 254 கிராம் 79 மில்லிகிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் போதைப்பொருள்களுடன் 971 பேர் கைது செய் யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 22 பேர் தடுப்புக்காவல் உத்தரவுகளைப் பெற்றுள்ளனர்.



அதேநேரம், அவர்களில் 10 பேர் மறுவாழ்வு நிலை யங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக் கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## துப்பாக்கிச்சூடுகளால் மாத்திரமின்றி

# மர்மமான முறையிலும் நாள்தோறும் மரணங்கள்

### அரசைச் சாடுகின்றது எதிரணி



இலங்கையில் தற்போது துப்பாக்கிச்சூடுகளால் மாத்திரமின்றி, மர்மமான முறையிலும் ஒவ்வொரு நாளும் பல மரணங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவுக்கு முன்கூட்டியே தனது உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகத் தகவல் கிடைத்திருக்காவிட்டால் இன்று அவர் உயிருடன் இருந்திருப்பாரா என்பது சந்தேகமே. அவரைப் போன்று எதிர்க்கட்சிகளில் உள்ள அனைவருக்கும் இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. சமூக வலைத்தளங்களில் பகிரங்கமாக இவ்வாறு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது.

பாதாள உலகக் குழுக்களை அழிப்பதாகக் கூறி, அதன் ஊடாக எதிர்க்கட்சிகளை முடக்குவதற்கான முயற்சிகளையே அரசு முன்னெடுக்கின்றது.

வெலிகம பிரதேச சபை தவிசாளர் தனக்கான பாதுகாப்பை எழுத்து மூலம் உத்தியோகபூர்வமாகக் கோரியிருந்த போதிலும், அவருக்குப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இறுதியாக அவரது உயிர் பறிபோனது.

எமது நாட்டில் தற்போது துப்பாக்கிச்சூடுகளால் மாத்திரமின்றி, மர்மமான முறையிலும் ஒவ்வொரு நாளும் பல மரணங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமானால் பொலிஸ் அரசியல் மயப்படுத்தப்படுவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்." – என்றார்.



# 19 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் 10 மாதங்களில் நாட்டுக்கு வருகை

### இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18 இலட்சத்து 78 ஆயிரத்து 557 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதிக்குள் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 20 ஆயிரத்து 33 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராச்சியத்தில் இருந்து ஒரு இலட்சத்து 74 ஆயிரத்து 21 சுற்றுலாப் பயணிகளும், ரஷ்யாவில் இருந்து ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 594 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியில் இருந்து ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகளும், சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 11, ஆயிரத்து 998 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸில் இருந்து 93 ஆயிரத்து 104 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவில் இருந்து 84 ஆயிரத்து 606 சுற்றுலாப் பயணிகளும், நெதர்லாந்தில் இருந்து 55 ஆயிரத்து 444 சுற்றுலாப் பயணிகளும் , அமெரிக்காவில் இருந்து 51 ஆயிரத்து 862 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.



# இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 90 மில்லியன் டொலர்கள் வழங்குகிறது

## ஒப்பந்தம் கைச்சாத்தானது

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து, இலங்கைக்கு, கிடைக்கப் பெறவுள்ள 90 மில்லியன் அமெரிக்க டொலருக்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் திறைசேரியில் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இதில், நிதி அமைச்சின் செயலாளரும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளரும் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த நிதியின் ஊடாக, கிராமப்புற வீதி, சமூக பொருளாதார மையங்களுக்கு இடையிலான போக்குவரத்து மற்றும் தேசிய ரீதியில் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அதன்படி, அனைத்து காலநிலை, வானிலைக்கு ஏற்ப, விசேட தேவையுடையவர்களையும் கருத்திற்கொண்டு கிராமப்புறங்களில் வீதிகளைப் புனரமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப் படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி நிதியின் ஊடாக, 21 கிலோமீற்றர் தேசிய வீதிகள் மறுசீரமைக்கப்படவுள்ளன.

அத்துடன், கிராமங்களை சென்றடையக்கூடிய 100 கிலோமீற்றர் அளவிலான வீதிகளும் பராமரிக்கப்படவுள்ளன

# வேலைவாய்ப்பு தருவதாகக் கூறி பண மோசடி: சந்தேகநபருக்கு நவம்பர் 3 வரை மறியல் நீடிப்பு!



வெளிநாடுகளில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி 60 இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மஹர பிரதான நீதிவான் லோச்சனி அபேவிக்ரம நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கோனவல பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது நீதிமன்றத்தில் ஆஜரான கடவத்தைப் பொலிஸார், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபருக்கு எதிராக 22 முறைப்பாடுகள் இருக்கின்றன எனவும், இவர் வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஏமாற்றியவர்களிடமிருந்து அவர்களது கடவுச்சீட்டுகளையும் பெற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபரின் வங்கிக் கணக்குகள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் கடவத்தைப் பொலிஸார், நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிவான் அந்த நபரை எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

## இந்த அரசாங்கத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“அரசுக்கு எதிரான கூட்டு எதிரணியினரின் நுகேகொடைப் பேரணி வெற்றியளிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். ஏனெனில், பொதுமக்களுக்குப் பயனற்ற ஒன்றாக அது உள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கூட்டு எதிரணியினர் பேரணியை நடத்துவதால் பாதாள உலகக் கோஷ்டியையோ அல்லது போதைப்பொருள் வர்த்தகத்தையோ தடுக்க முடியாது. எனவே, அது பொதுமக்களுக்குப் பயனளிக்கும் ஒரு விடயமாக இருக்காது. அதிக சவால்கள் நிறைந்தது.

எனவே, பொதுமக்களுக்குப் பலனளிக்காத ஒரு விடயத்துக்குப் பொதுமக்கள் ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். பொதுமக்களது ஆதரவு இல்லாத மேற்படி விடயத்தால் எதுவித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

கூட்டு எதிரணியினரின் பேரணி ஊடாக இந்த அரசைக் கவிழ்க்க முடியாது. இந்த அரசு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலமிக்க மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டது என்பதை எதிரணியினர் உணர்ந்துகொள்ள வேண்டும்.” – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றுக்கு ஒரு விடயத்தை நேற்று முன்தினம் சுட்டிக் காட்டினார்.

மேற்படி விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணை அதிகாரிகள் மூவர் ஆரம்பம் முதல் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர். அவர்கள் மூவரும் எதிர்மனுதாரர்களாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் குணரோஜன் என்ற இன்ஸ்பெக்டர். அவர் தான் இந்தப் பிரிவின் பொறுப்பதிகாரியாக முன்னர் இருந்தவர். ஏற்கனவே பொலிஸார் அவருக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றமையை அடுத்து அவர் தலைமறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக பிடிவிறாந்தும் உள்ளது.

இரண்டாவது நபர் வஸிபன் என்ற கான்ஸ்டபிள்.அவருக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட நிலையில் அவர் ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையில் இடமாற்றப்பட்டுள்ளார்.

மூன்றாவது நபர் - அவர்தான் இந்த விசாரணை நடவடிக்கையில் முக்கியமாக ஈடுபட்டவர் - என்று கூறப்படுகின்றது. ஏற்கனவே ஓர் உயிரிழப்பை ஏற்படுத்திய விபத்தோடு நேரடியாக சம்பந்தப்பட்டு, குற்றத்தை ஒப்புக் கொண்டு குற்றவாளியாக காணப்பட்ட போதிலும், அது மறைக்கப்பட்டு பொலிஸ் சேவையில் தொடர்கின்றார். அது பற்றிய ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளோம். இவ்வாறு குற்றவாளிகளின் குகையான விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவே சட்டத்தரணிகளுக்கு எதிரான புலனாய்வு நடவடிக்கை என்ற பெயரில் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றது என சுமந்திரன் மன்றில் சுட்டிக்காட்டினார்.

மேற்படி குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி அது பற்றிய தகவல்களுடன் வருமாறு அரச சட்டத்தரணியை வழிப்படுத்தி வழக்கை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம்.

அடுத்த வழக்கு - யாழ்ப்பாணத்தில் வலிகாமம் பகுதியில் அரசாங்கம் இராணுவத்துக்கென சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு எடுத்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தில் 2013 இல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். மொத்தம் 2,176 காணி உரிமையாளர்களின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கும் நேற்று முன்தினம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர்கள் தம்மிக கணேபொல, ஆதித்த பட்டபெந்திகே ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சில விடயங்களை நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

இந்தக் காணிகளை சுவீகரிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் அரசினால் ஏற்கனவே விடுக்கப்பட்ட நிலையிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனை அடுத்து மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசின் காலத்தில் இந்தக் காணிச் சுவீகரிப்பை கைவிட்டு, காணிகளை மக்களிடம் மீளளிக்க அரச உயர் மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்பட்டது. தரப்புகள் சுமுகமாக இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக நீதிமன்றம் வழக்கை அவ்வப்போது திகதியிட்டு ஒத்திவைத்து வந்தது.

சுவீகரிக்கப்படுவதற்காக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட பொதுமக்களின் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளில் சுமார் 80 முதல் 85 வீதமானவை - மக்களிடம் - உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு விட்டன. அதாவது காணிகள் உடைமை ரீதியாக அவர்களிடம் உள்ளன. ஆனால் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலைக் கை வாங்குவது உட்பட்ட சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் காணி அமைச்சு விடயங்களைப் பல்லாண்டுகளாக இழுத்தடித்து வருகின்றது. உரிமையாளர்கள் சட்டரீதியாக அதன் உரிமையைத் தாங்கள் கையாளவோ, பிறிதொருவருக்குக்கு உரிமைமாற்றிக்கொடுக்கவோ முடியாத நிலை இருப்பதை சுமந்திரன் நேற்று மன்றில் சுட்டிக் காட்டினார்.

அண்மையில் வசாவிளான் பகுதியில் இராணுவத்தினர் பொதுமக்களின் காணியில் வைத்தியசாலை கட்ட முற்படுகிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்ட நிலமும் இத்தகைய சர்ச்சைக்கு உள்ளான பிரதேசம்தான் என்பதையும் சுமந்திரன் நேற்று முன்தினம் நீதிமன்றில் சுட்டிக் காட்டியமையை அடுத்து, மக்களிடம் உடைமை கையளிக்கப்பட்ட அவர்களின் காணிகளை சட்டரீதியாக அவர்கள் கையாள்வதற்குத் தடையாக இருக்கும் வர்த்தமானி மற்றும் அரச பிரகடனங்களை கை வாங்கி, மக்களுக்கு அவற்றை சட்டரீதியாக கையளிக்கும் நடவடிக்கை தொடர்பிலும், பொதுமக்களின் காணியில் இராணுவம் மருத்துவமனை கட்டுவது போன்ற விடயங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து உரிய தகவல்களுடன் அடுத்த விசாரணைக்கு சமுகம் தரும்படி அரச தரப்பை வழிப்படுத்தி வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இவையிரண்டும் தமிழ் மக்களுடன் தொடர்புபட்ட வழக்குகள் என்பதனால் அவற்றை விவரித்துள்ளேன்.

## 'நவ. 21' நுகேகொடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறும் பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்பதை அந்தக் கட்சி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் இதனைத் தெரிவித்துள்ளார்.

“இந்தப் பேரணியில் பங்கேற்பதில்லை என எமது கட்சியின் முகாமைத்துவக் குழு தீர்மானித்துவிட்டது.” - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நுகேகொடை கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்கும் எனச் சில எதிர்க்கட்சிகள் நம்பிக்கை வெளியிட்டு வரும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## மாகாணத் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பித்திருக்கின்றனர்.

நாட்டில் இருந்து போதைப்பொருளை முற்றாக ஒழித்து நாட்டைக் கட்டியெழுப்புவது சிறந்த வேலைத்திட்டமாகும். எனினும், அது பொது நிர்வாகத்தின் பிரதான பொறுப்பல்ல. போதைப்பொருள் ஒழிப்பு என்பது அரச நிர்வாகத்தின் ஒரு பகுதி மாத்திரமேயாகும். கடந்த அரசுகளும் இதனைச் செய்திருக்கின்றன. ஆனால், அவை ஊடகங்கள் ஊடாகப் பாரிய பிரசாரங்களாக முன்னெடுக்கப்படவில்லை.

எவ்வாறு அரசை நிர்வகிப்பது என்று தெரியாமல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திண்டாடிக் கொண்டிருக்கின்றார். அதனால் பொலிஸ்மா அதிபர் ஊடாக ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முயற்சிக்கின்றனர். அந்த அடிப்படையிலேயே வெலிகம பிரதேச சபை தவிசாளரின் கொலை தொடர்பான விசாரணைகளை சமூக ஊடகங்களில் பகிரங்கமாக முன்னெடுக்கின்றனர். இவ்வாறு பொலிஸ்மா அதிபரைக் கொண்டு ஆட்சியை முன்னெடுத்துச் செல்ல முடியாது என அரசை எச்சரிக்கின்றோம்.

போதைப்பொருள் பிரசாரங்களைத் தவிர அபிவிருத்திகள் தொடர்பிலோ முதலீடுகள் தொடர்பிலோ முதலீட்டு வருமானம் தொடர்பிலோ அரசால் இதுவரையில் எந்தவொரு அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

எதிர்க்கட்சிகளை ஒடுக்கி முன்னெடுக்கப்படும் அரசியலுக்கு மக்கள் எவ்வாறு பதிலளிக்கப் போகின்றனர் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். எனவே, முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்டுமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம். இனியும் மாகாண சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்த முடியாது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் தினமே இந்த அரசின் இறுதித் தினமும் ஆகும்.” - என்றார்.

## யாழ்.பல்கலை...

(முதலாமம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கி ஒன்று, அவற்றுக்கான நான்கு மகஸின்கள், மூன்று சிறிய குண்டுகள், கிளைமோரை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்படும் ரிக்னேட்டர், வயர்கள் மற்றும் காயங்களுக்கான மருந்துப் பொருட்கள், சேலைன் போத்தல், இரத்தக்கறையுடனான சாரம் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

நூலகத்தின் கூரைத் திருத்த வேலைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டன. அதன்போது கூரைக்குள் இரண்டு மகஸின்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால், கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரின் ஒத்துழைப்புடன், மகஸின்கள் இரண்டையும் மீட்டதுடன், அதன் அருகில் சுமார் ஐந்தடி நீளமான வயரையும் மீட்டனர்.

அதன்பின்னர் கூரைக்குள் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் எனும் சந்தேகத்தில் கூரையினுள் தேடுதல் நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுத்த வேளை, ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று , மேலும் இரண்டு மகஸின்கள், மூன்று சிறிய குண்டுகள், கிளைமோரை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்படும் ரிக்னேட்டர், வயர்கள் மற்றும் காயங்களுக்கான மருந்துப் பொருட்கள், சேலைன் போத்தல், பஞ்சு, காயங்களுக்குக் கட்டும் பன்டேஜ், இரத்தக்கறையுடனான சாரம் உள்ளடங்கலாக மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்கள் உள்ளிட்ட ஏனைய பொருட்கள் அனைத்தும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்று சனிக்கிழமை அது தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும், அதனையடுத்து மன்றினால் வழங்கப்படும் கட்டளைக்கு ஏற்ப அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, துப்பாக்கி மகஸின்கள் சுற்றப்பட்டு இருந்த பத்திரிகை, சேலைன் போத்தலின் காலாவதி திகதி என்பவற்றின் அடிப்படையில் அவை 2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கூரைக்குள் வைக்கப்பட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்ற நிலையில், கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# வெளிநாட்டு முதலீட்டுக்கான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக ஹனீப் யூசுப் நியமனம்

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுபை நியமித்துள்ளார்.

அரசமைப்பின் 41 (1) பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய முதலீட்டு கூட்டாண்மை தொடர்பில் ஹனீப் யூசுப்க்கு உள்ள அனுபவம் மற்றும் இலங்கையின் தனியார் துறையின் அபிவிருத்திக்கு அவர் ஆற்றிய நீண்டகால பங்களிப்பை கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் பொருளாதார மறுமலர்ச்சிக்கான வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்க அவருக்கு உள்ள இயலுமையை பாராட்டும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சர்வதேச முதலீட்டாளர்கள் மற்றும் மூலோபாய பங்குதாரர்களுடன் உயர் மட்ட கலந்துரையாடல்களுக்கான வசதிகளை வழங்குதல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இந்நாட்டிற்கு கொண்டு வரும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்திற்கு ஆதரவளித்தல், முக்கிய முதலீட்டு வாய்ப்புகளை இனங்கண்டு அவற்றை மேம்படுத்தி முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், இலங்கை முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, துறைமுக நகர ஆணைக்குழு மற்றும் குறித்த துறைசார் அமைச்சுகளுடன் நெருங்கிய தொடர்புகளுடன் செயற்படுதல் ஆகியவை அவருக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

நாட்டில் நிலைபேறான வெளிநாட்டு முதலீடுகளுக்கு உகந்த சூழலை கட்டியெழுப்பவும், இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைத்தன்மை பற்றி சர்வதேச நம்பிக்கையை உறுதி செய்யவும், பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்தவும் அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை வலுப்படுத்தவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஹனீப் யூசுப், மேல் மாகாண ஆளுநர் நியமனத்திற்கு மேலதிகமாக சேவையாக இப்பதவியில் செயற்படுவார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

# கண்டியில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் உயிரிழப்பு!



மின்சாரம் தாக்கிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் கண்டி, பொக்காவல பொலிஸ் பிரிவின் ரம்புகேவெல பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்த பெண், ரம்புகேவெல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மின்சாரக் ஹீட்டரைப் பயன்டுத்திய போது, அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தச்சம்பவம்தொடர்பில்பொக்கவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அநுரவின் பாதீடு

நாட்டின் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தம்முடைய அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டத்தை (பாதீட்டை) வரும் வெள்ளியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றார்.

கடந்த ஆண்டு நேரத்துடன் வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க கூடிய கால அவகாச ஒழுங்கு முறை அவருக்குக் கிடைக்கவில்லை. அதனால் தன்னுடைய நிதி நிர்வாகத் திட்டத்தை - இலக்கை - முழு கட்டமைவில் அவரால் அந்த வரவு - செலவுத் திட்டத்தில் வெளிப்படுத்த முடியவில்லை. அடுத்த ஆண்டுக்காக வரும் வாரத்தில் அவர் சமர்ப்பிக்கப் போகின்ற வரவு - செலவுத் திட்டம்தான் அவரது பொருளாதார கொள்கைப் போக்கை ஓரளவு வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்த வரவு - செலவுத் திட்டத்தில் பெரிய அளவில் புதிய வரிகள் அல்லது உயர்ந்த விகித விதிப்புக்கள் அறிமுகப்படுத்த வாய்ப்பில்லை என்று கூறப்படுகின்றது. ஆயினும் நிதிச் சேவைகளில் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி நீக்கம் அல்லது பெறுமதி சேர் வரி (வற்) வரம்புகளில் மாற்றங்கள் செய்தல் போன்ற ஓரளவு வரி நிவாரணத்தை அவர் கொண்டுவரக் கூடும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துக் கூறுகின்றனர்.

புதிய வரிகளைப் பெரிய அளவில் விதிக்காமல் விட்டாலும் கூட, நாட்டின் வருவாயைப் பெருக்குவதற்கான புதிய வழிமுறைகளை - மார்க்கத்தை - அவர் வெளிப்படுத்த வேண்டி இருக்கும் என்பது தவிர்க்க முடியாத கட்டாயமாக அமையும்.

ஏற்கனவே வாகன இறக்குமதிகள் மூலம் இந்த ஆண்டு இறுதிக்குள்ளேயே வரி வருமானம் 700 பில்லியன் ரூபா என்ற ஆரம்ப எல்லைகளை எட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. இது நாட்டின் மொத்த வரி வருவாயில் சுமார் 15 வீதம் ஆகும்.

ஆயினும், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டமையை அடுத்து இரண்டரை ஆண்டுகளாக முற்றாக நிறுத்தப்பட்டிருந்த வாகன இறக்குமதிக்கு மீண்டும் அனுமதி வழங்கியதன் மூலமே இந்த இலக்கை எட்ட முடிந்தது. இதற்காக நாடு தான் சேமித்து வைத்திருந்த அந்நிய செலாவணியை - இறக்குமதிக்கான தன்னுடைய வலிமையை - கணிசமாக இழந்திருக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மாகாண சபை தேர்தல் நடக்கும் என்று ஆரம்பத்தில் கருதப்பட்டமையினால், அதை இலக்கு வைத்து, இந்த வருட வரவு - செலவுத் திட்டம் மக்களைக் கவர்ந்திழுக்கும் தந்திரோபாயங்களைக் கொண்டதாகவே - அரசியல் உள்நோக்கம் மிக்கதாக - அமையும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தமது ஆளும் கட்சி கூட்டணியின் பிரதான பங்காளிகளான தனது ஜே.வி.பி. கட்சியின் அரசியல் குழு மாகாண சபை தேர்தலுக்கு பச்சைக் கொடி காட்டாத பின்புலத்தில் அந்தத் தேர்தல் நோக்கத்திற்கான வரவு - செலவுத் திட்டக் கொள்கை போக்கைக் கைவிட்டு, பொருளாதார இலக்குகளுக்கான நோக்கத்தோடு வரும் வெள்ளிக்கிழமையன்று தமது வரவு - செலவுத் திட்டத்தை அவர் சமர்ப்பிப்பார் எனக் கூறப்படுகின்றது.

எதிர்காலத்தில் ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் கொள்கைப் போக்கும் சிந்தனையும் செயற்பாடும் எந்த திசையில் இருக்கும் என்பதை உரைத்துப் பார்ப்பதற்கான ஒரு வரவு - செலவுத் திட்டமாக இது அமையுமென்பது திண்ணம்.









# உதயசூரியன் சனசமூக நிலையத்தால் மாணவர்களிடையே வாசிப்பு போட்டி

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்பு போட்டி நடாத்தப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சந்தை வீதியில் அமைந்துள்ள உதயசூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் பூ.பிரபாகர் தலைமையில் வாசிப்பு இந்தப் போட்டிகள் நேற்று முன்தினம் நடாத்தப்பட்டன.

மாணவர்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி,நடுவர்களால்வழங்கப்பட்ட இராமாயண கதையின் சிறு பகுதிகளை மாணவர்கள் வாசித்து போட்டியிட்டனர்.

இதில் முதல் இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு சிறப்பு பரிசில்களும், வாசிப்பு போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசல்களும் வழங்கி வைக்கப்பட்டன.





# 'கெஹெல்பத்தர பத்மே'வின் 3 நண்பர்கள் ஐஸ் போதைப்பொருளுடன் சிக்கினார்கள்!

பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கெஹெல்பத்தர பத்மே" என்பவரின் சகாக்கள் மூவர் வத்தளை பிரதேசத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை – பல்லியவத்த பிரதேசத்தில் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது மூன்று சந்தேகநபர்களும் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில் கைது செய்யப்பட்ட மூவரும் "கெஹெல்பத்தர பத்மே" என்பவரின் சகாக்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியானது எனப் பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வெலிசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இந்தோனேசியாவில் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியா பொலிஸாரால் 7 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது "கெஹெல்பத்தர பத்மே" உள்ளிட்ட பாதாள உலகக் குழுவினர் கடந்த ஓகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ரயிலுடன் மோதிய ஓட்டோ! சாரதி பரிதாப உயிரிழப்பு!!

ரயில் மோதி ஓட்டோ சாரதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கஹவ மற்றும் அக்குரல ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள ரயில் பாதையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற விபத்திலேயே ஓட்டோ சாரதி உயிரிழந்துள்ளார்.

கவனக்குறைவாகச் செலுத்தப்பட்ட ஓட்டோ ஒன்று பெலியத்தையில் இருந்து மருதானை நோக்கிப் பயணித்த ரயிலுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இறைச்சிகளை ஏற்றிச் சென்ற ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்துக்கு தனிநபர் மட்டும் காரணம் இல்லை

## நடிகர் அஜித் தெரிவிப்பு

"கரூர் நெரிசலுக்கு அந்த தனிநபர் மட்டுமே காரணம் அல்ல. நாம அனைவருமே காரணம் தான். ஊடகங்களுக்கு இதில் ஒரு பங்கு இருக்கிறது."

– இவ்வாறு நடிகர் அஜித் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அஜித் சமீபத்திய அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்,

"கரூர் நெரிசல் காரணமாக தமிழ்நாட்டில் நிறைய விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த தனிநபர் மட்டுமே இதற்கு காரணம் அல்ல. நாம அனைவருமே காரணம் தான். ஊடகங்களுக்கும் இதில் ஒரு பங்கு இருக்கிறது. ஒரு சமூகமாக கூட்டத்தை கூட்டிக் காட்டுவதில் நாம் மிகுந்த ஈடுபாடு காட்டுகிறோம். இவை அனைத்தும் முடிவுக்கு வரவேண்டும்.

கிரிக்கெட் போட்டிகளை பார்க்க கூட கூட்டம் வருகிறது. ஆனால் அங்கெல்லாம் இப்படி நடப்பதில்லை. இது ஏன் தியேட்டர்களில் மட்டும் நடக்கிறது? பிரபலங்கள், திரைக் கலைஞர்களுக்கு மட்டுமே ஏன் இப்படி நடக்கிறது? ஒட்டுமொத்த திரையுலகத்தையும் இது மோசமாக சித்தரிக்கிறது. ஹாலிவுட் நடிகர்கள் கூட இதையெல்லாம் விரும்புவதில்லை.

எங்களுக்கு அந்த அன்பு தேவைதான். அதற்காகத்தான் கடுமையாக உழைக்கிறோம். குடும்பத்தை விட்டு பிரிந்து, நீண்டநேரம் படப்பிடிப்பு தளங்களில் இருக்கிறோம், ஒரு படத்தை உருவாக்க காயங்களை அனுபவிக்கிறோம், மன அழுத்தம், தூக்கமில்லாத இரவுகளை கடக்கிறோம். இவை அனைத்தும் எதற்காக? மக்களின் அன்புக்காகத்தான். ஆனால் அந்த அன்பைக் காட்ட வேறு வழிகள் உள்ளன. ஊடகங்கள் முதல்நாள் முதல்காட்சி கலாச்சாரத்தை ஊக்குவிக்க கூடாது என்று நினைக்கிறேன்." என்று தெரிவித்தார்.

# அ.தி.மு.கவில் இருந்து செங்கோட்டையன் நீக்கம்

## பழனிசாமி அதிரடி நடவடிக்கை

அ.தி.மு.க. மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"அ.தி.மு.கவின் கொள்கை – குறிக்கோள்களுக்கும் கோட்பாடுகளுக்கும் முரணான வகையில் செயல்பட்டுள்ளார். கட்சியின் சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டு, கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்துகொண்டார்.

கழகத்தில் இருப்பவர்கள், கட்சியில் இருந்து நீக்கப்பட்டவர்களுடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது தெரிந்திருந்தும், அவர்களுடன் ஒன்றிணைந்து, கட்சியின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில், கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு களங்கமும் அவப்பெயரும் உண்டாகும் விதத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

இந்தக் காரணங்களால் ஈரோடு புறநகர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டையன் இன்று முதல் அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பொறுப்பு உட்பட அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் நீக்கி வைக்கப்படுகிறார். அ.தி.மு.கவினர் யாரும் இவருடன் எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

அ.தி.மு.க. மூத்த தலைவரும், முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையன், கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் சேர்க்க வேண்டும் என்று பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு கெடு விதித்தார்.

இதனால் அதிருப்தியடைந்த பழனிசாமி, செங்கோட்டையனின் கட்சிப் பொறுப்புகளை பறித்தார். இந்த நிலையில், நேற்று முன்தினம் தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்துவதற்காக மதுரை சென்ற செங்கோட்டையன், தனியார் ஹோட்டலில் தங்கியிருந்த ஓ.பன்னீர்செல்வத்தை திடீரென சந்தித்துப் பேசினார்.

பின்னர் இருவரும் ஒரே காரில் மதுரையில் இருந்து பசும்பொன்னுக்கு சென்றமை பேசுபொருளாக மாறியது. பின்னர் ராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் அருகே டி.டி.வி.தினகரன், ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டையன் மூவரும் சந்தித்து, சிறிது நேரம் ஆலோசனை செய்தனர். பின்னர் பசும்பொன் சென்ற மூவரும் தேவர் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர்.

துரோகத்தை வீழ்த்தவும், தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பவும் அவர்கள் சபதம் செய்தனர். பின்னர் அங்கு வந்த சசிகலாவை, ஓ.பி.எஸ், செங்கோட்டையன் சந்தித்துப் பேசினர். ஆனால், டி.டி.வி.தினகரன் சசிகலாவை சந்திக்காமல் புறப்பட்டு சென்றார். இச்சம்பவம் நேற்று முன்தினம் அ.தி.மு.கவினர் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியது.

செங்கோட்டையனின் செயல்பாடுகள் தொடர்பாக மதுரை கப்பலூரில் கட்சியின் மூத்த நிர்வாகிகளிடம் நேற்று முன்தினம் பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்குவதற்கு எந்த தயக்கமும் இல்லை. அதற்கு சில நடைமுறைகள் உள்ளன, பொறுத்து இருங்கள்." என்று தெரிவித்திருந்திருந்தார்.

இந்நிலையில், அவரை கட்சியில் இருந்து பழனிசாமி நீக்கியிருக்கிறார்.



# அமெரிக்காவில் 33 ஆண்டுக்கு பின் அணு ஆயுத சோதனை நடத்தப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்தப்படும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த 1945 ஆம் ஆண்டு ஜுலை 16 ஆம் திகதி அமெரிக்காவில் முதல் அணு ஆயுத சோதனை நடத்தப்பட்டது. அந்த நாடு இதுவரை 1,054 அணு ஆயுத சோதனைகளை நடத்தி உள்ளது. கடைசியாக கடந்த 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் திகதி அமெரிக்காவின் நெவாடா அணு சக்தி சோதனை நடத்தியதில் பூமிக்கடியில் 2,300 அடி ஆழத்தில் சோதனை நடத்தப்பட்டது.

சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி அமெரிக்காவிடம் 5,044 அணு ஆயுதங்கள் உள்ளன. ரஷ்யாவிடம் இதே அளவுக்கு அணு ஆயுதங்கள் உள்ளன. சீனாவிடம் 550, பிரான்ஸிடம் 290, பிரிட்டனிடம் 225, இந்தியாவிடம் 180 அணு ஆயுதங்கள் உள்ளன.

இந்த சூழலில் ரஷ்யா அண்மையில் அணு சக்தியில் செயல்படும் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்தது. இது உலகின் முதல் அணு சக்தி இயங்குதள ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணை 14,000 கிலோ மீற்றர் தொலைவு வரை பாயும். அணு சக்தியில் தொடர்ந்து 15 மணி நேரம் பறக்கும் திறன் கொண்டதாகும்.

எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை 1,000 ஆக அதிகரிக்க சீன இராணுவம் திட்டமிட்டு உள்ளது. அந்த நாட்டில் கடந்த 1990 ஆம் ஆண்டில் அணு ஆயுத சோதனை நிறுத்தப்பட்டது. ஆனால் சீன இராணுவம் இரகசியமாக அணு ஆயுத சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த சூழலில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில்,

"இதர நாடுகளைவிட அமெரிக்காவிடம் அதிக அணு ஆயுதங்கள் உள்ளன. எனது முதல் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் புதுப்பிக்கப்பட்டன. தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு 33 ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்காவில் மீண்டும் அணு ஆயுத சோதனை நடத்த அறிவுறுத்தி உள்ளேன். இதன்படி அமெரிக்காவில் விரைவில் அணு ஆயுத சோதனை தொடங்கும்.

அதிக அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 2 ஆவது இடத்தில் ரஷ்யா, 3 ஆவது இடத்தில் சீனா உள்ளன. அணு ஆயுதங்களால் பேரழிவு ஏற்படும் என்பதை நன்கறிவேன். அணு ஆயுத சோதனைகளை நடத்த நான் விரும்பவில்லை. ஆனால் இதர நாடுகள் அணு ஆயுத சோதனைகளை நடத்தும் சூழலில் அமெரிக்காவிலும் அணு ஆயுத சோதனை நடத்த போர் துறையை அறிவுறுத்தி உள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# பாகிஸ்தான் இராணுவ தாக்குதல்: பலுசிஸ்தானில் 18 பேர் மரணம்





பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அந்நாட்டு இராணுவ தாக்குதலில் 18 போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

உளவுத் தகவலின் அடிப்படையில் பலுசிஸ்தானின் குவெட்டா மாவட்டம், சில்டன் மலைத்தொடரிலும், கெச் மாவட்டத்தின் புலேடாவிலும் பாகிஸ்தான் இராணுவம் கடந்த புதன்கிழமை இரவு தேடுதல் பணி மேற்கொண்டது.

இதில் இராணுவத்தினர் – பலுசிஸ்தான் போராளிகள் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. இதில் 18 போராளிகள் உயிரிழந்தனர். அங்கிருந்து ஆயுதங்கள், வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டன.



# செம்மணிப் புதைகுழிக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி போராட்டமும், கருத்தரங்கும் யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், "செம்மணி மனிதப் புதைகுழியை மீண்டும் மூடி மறைப்பதை நிறுத்து: உண்மையை வெளிப்படுத்து" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி, இன்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆர்ப்பாட்டமும், அதைத் தொடர்ந்து பிற்பகல் 3 மணியளவில் தந்தை செல்வா கலையரங்கத்தில் கருத்தரங்கும் இடம்பெறவுள்ளன.

# வர்த்தக நிலையம் உடைத்து பொருள்கள், பணம் திருட்டு

நெல்லியடி திருமால்சோதி வீதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன என நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு சென்ற வர்த்தகர் மறுநாள் புதன்கிழமை அதை திறந்த போதே கூரை பிரித்து அங்கிருந்த பொருள்கள் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன திருடப்பட்டமை தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# மேல் மாடியில் மேசன் வேலை செய்த தொழிலாளி வழுக்கி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம்,கோண்டாவில் பகுதியில் மேல் மாடியில் மேசன் வேலை செய்த தொழிலாளி ஒருவர் வழுக்கி விழுந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த சுப்பையா உதயராசா (வயது 56) என்ற இரண்டு பிள்ளைகளைகளின் தந்தையாவார்.

மேற்படி குடும்பத்தார் கடந்த 22 ஆம் திகதி கோண்டாவில் பகுதியில் மேல்மாடியில் மேசன் வேலை செய்யும் போது வெற்றிலை துப்ப முற்பட்ட போது தவறி விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை உயிரிழந்தார்.



இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை கோப்பாய் பொலிஸார் நெறிப்படுத்தினர்.




# தெற்கு ஆழ்கடலில் அனர்த்தத்திற்கு உள்ளான 4 மீனவர்களைப் பாதுகாப்பாக மீட்ட கடற்படை

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

கடலில் அனர்த்தத்திற்கு உள்ளான 'கேஷான் புதா 1' என்ற பல நாள் மீன்பிடிக் கப்பலில் இருந்து 4 மீனவர்கள் மீட்கப்பட்டு இலங்கைக் கடற்படைக் கப்பல் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

அம்பாந்தோட்டையிலிருந்து சுமார் 354 கடல் மைல் (655 கி.மீ) தொலைவில் ஆழ்கடலில் அனர்த்தத்தில் சிக்கிய இந்தக் கப்பலில் இருந்த நான்கு மீனவர்களும், கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்பின் கீழ் கடற்படையினரால் மீட்கப்பட்டு, நேற்று வெள்ளிக்கிழமை காலை இலங்கை கடற்படைக் கப்பலான சிதுரல மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மேற்படி பல நாள் மீன்பிடிக் கப்பலின் தொடர்பு இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன எனவும், கப்பலையும் அதில் இருந்த மீனவர்களையும் கண்டு பிடிக்க உதவி கோருவதாகவும் மீன்வள மற்றும் நீர்வளத் துறை கடற்படைத் தலைமையகத்தில் உள்ள கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு அறிவித்தது. அதை அடுத்து, இது தொடர்பாக இலங்கை கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வலயம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் உள்ள மீன்பிடி மற்றும் கடல்சார் சமூகத்திற்குத் தெரிவிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன்படி,, இலங்கையின் அம்பாந்தோட்டைக்கு தெற்கே சுமார் 354 கடல் மைல் (655 கிமீ தொலைவில் ஆழ்கடலில் இக் கப்பல் கவிழ்ந்து ஆபத்தில் இருந்த போது, நான்கு மீனவர்களும் இந்தோனேசிய மீன்பிடிக் கப்பலால் மீட்கப்பட்டு, MV Graceful Star என்ற வணிகக் கப்பலிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தலின் பேரில், இலங்கை கடற்படையின் சிதுரல என்ற கப்பலும் இந்த மீட்பு நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டது. கொழும்பு கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தின் ஒருங்கிணைப்புடன், மீட்கப்பட்ட நான்கு மீனவர்களுக்கும் அடிப்படை முதலுதவி அளித்து, அவர்களை விரைவாக கரைக்கு கொண்டு வந்து, மேலதிக சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது மருத்துவமனைக்கு கடற்படை அனுப்பி வைத்தது.











# மாதாந்த சூத்திரத்திற்கமைய பெட்ரோலின் விலை குறைப்பு

மாதாந்த எரிபொருள் விலைச் சூத்திரத்திற்கு அமைய, நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெட்ரோல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி அதன் புதிய விலை 294 ரூபாயாகும். சூப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அதன் புதிய விலை 318 ரூபாயாகும் .

அதேவேளை, வெள்ளை டீசல் லீற்றர் ஒன்றின் விலை 277 ரூபாயாகவும் , ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீற்றரின் விலை 335 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 180 ரூபாயாகவும் மாற்றமின்றி அதே விலையில் நிலவுகின்றன.



# போதைப்பொருளுடன் ஐவர் யாழில் கைது

ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டனர்.

ஒரு பெண் மற்றும் நான்கு ஆண்கள் என ஐவரே யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

2 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒரு ஆணும், 2 கிராம் 150 மில்லி கிராம் ஹெரோயினுடன் ஒரு பெண்ணும், 80 மில்லி கிராம் ஹெரோயினுடன் மூன்று ஆண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களிடம் நடத்தப்படும் மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இந்திய அன்பளிப்பாக கிளிநொச்சிக்குக் கிடைத்த 75 உழவு இயந்திரங்கள் ஏலத்தில் விடப்படுகின்றன

**(ந.லோகதயாளன்)**

இந்திய அரசின் அன்பளிப்பாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு என வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் அனைத்தும் விரைவில் ஏலத்தில் விற்பனைசெய்யப்படவுள்ளன.

2010 ஆம் ஆண்டு இந்திய அரசினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 500 உழவு இயந்திரங்கள் வடக்கின் 5 மாவட்ட கமநல சேவைத் திணைக்களங்களிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன. எனினும் அந்த உழவு இயந்திரங்களின் பதிவு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

பொருளாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு வடக்கின் 5 மாவட்ட கமநல சேவை நிலையங்களிற்கும் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்கள் நீண்ட காலமாக பாவனையின்றிக் காணப்படுவதனால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்ய முற்பட்ட போது, பதிவு வேறு ஓர் அமைச்சின் கீழ் காணப்படுவதனால் கமநல சேவைத் திணைக்களத்தால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. நீண்ட கால முயற்சியின் பின்னர் தற்போது கமநல சேவை திணைக்கள ஆணையாளரின் பெயரிற்கு அவை பதிவு மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு மாற்றம் செய்யப்பட்டதனால் கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை நிலையங்களில் நிற்கும் 75 உழவு இயந்திரங்களில் அதிகமானவை விரைவில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன எனத் தெரிகிறது.




# முல்லையில் மீனவ மாநாடும் பேரணியும்

(பா.சதீசன்)

ஏற்றுக்கொள்ளப்பட்ட மீனவப் பிரச்சினைகளின் தீர்வை முன்னோக்கிய மீனவ மாநாடு நேற்று முல்லைத்தீவு நகரில் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் என்பவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகள் மற்றும் இந்திய மீனவர்களின் அத்து மீறல் செயற்பாடுகள் உள்ளிட்ட மீனவ மக்களுக்கு பாதகமான விடயங்களை கட்டுப்படுத்தி பாரம்பரிய கடற்றொழிலாளர்களைப் பாதுகாப்பதுடன், கடல்வளத்தினையும் பாதுகாக்குமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று வடமாகாண மீனவ மக்களால்

முல்லைத்தீவு கடற்கரை வளாகத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து 'ஏற்றுக்கொள்ளப்பட்ட மீனவப் பிரச்சினைகளின் தீர்வை முன்னோக்கிய மீனவ மாநாடு' ஆரம்பமானது.

இந்த மாநாட்டில் கடற்றொழிலாளர்களின் நலன்சார்ந்தும், கடல்வளத்தினைப் பாதுகாப்பது சார்ந்தும் 'முல்லைப் பிரகடனம்' என்ற பெயரிலான பிரகடனம் ஒன்று முன்மொழியப்பட்டது.

அத்தோடு இந்தொ பிரகடனம் நிகழ்வில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் உள்ளிட்ட விருந்தினர்களிடமும் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் மாநாட்டில் வன்னிமாவட்ட நாடாளுமன்று உறுப்பினர் துரைராசா ரவிகரன், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய வடக்குமாகாண கடற்றொழிலாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.














# சபாநாயகர் ஊடாக பாதுகாப்புக் கோரினர் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்

எதிர்க்கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட எதிக்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகர் ஊடாக பொலிஸ் மாஅதிபரிடம் கோரியுள்ளனர்.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

சபாநாயகர் டொக்டர் ஜகத் விக்ரமரத்னவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலுக்கு பொலிஸ் மாஅதிபர் சட்டத்தரணி ப்ரியந்த வீரசூரியவும் அழைக்கப்பட்டிருந்தார்.

எதிர்க்கட்சியின் பிரதம கொரடா கயந்த கருணாதிலக இதற்கு முன்னர் சபாநாயகரிடம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய இந்த கலந்துரையாடலுக்கு பொலிஸ் மாஅதிபரும் அழைக்கப்பட்டார் என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது.

எவ்வாறாயினும், இந்தக் கலந்துரையாடலில் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.













# சுபநேரத்தைப் பார்க்காமல் மக்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தி ஒன்றுபட வேண்டும்

## நாமல் கோரிக்கை



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பதவிக்கு ஏற்றாற்போல் சிறந்த எதிர்க்கட்சியாக செயற்பட வேண்டும் எனவும் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு சுபநேரம் பார்த்துக் கொண்டிருக்க கூடாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகள் சுப நேரத்திற்காக காத் திருக்காமல் பொதுமக்களுக்காக ஒன்று பட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங் கத்தின் செயற்பாடுகளுக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவதாகவும் சர்வாதிகாரத்தை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் செயற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய பொறுப்பு சகல எதிர்க்கட்சிகளுக்கும் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்கு றுதிகளை மறந்து விட்டு எதிர்க்கட்சி களின் உறுப்பினர்களை பழிவாங்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படுகிறது எனவும் குறிப்பாக ராஜபக் ஷர்களை எந்த வகையில் நெருக்கடிக்குள்ளாக்கலாம் என்பதற்கு அரசாங்கம் அதிக காலத்தை செலவிடுகிறது என்றும் நாமல் ராஜ பக் ஷ தெரிவித்துள்ளார்.

தம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக் களை சட்டத்தின் முன் நிரூபிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறோம் என்றும் அப்போது தான் எமக்கு அடு-த்த தேர்தல்களில் எவ்வித குற்றச்சாட்டுக் களும் இல்லாமல் முன்னிலையாக லாம் எனவும் நாமல் ராஜபக்ஷ குறிப் பிட்டுள்ளார்.




# ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தில் திருத்தம் செய்வதற்குத் தீர்மானம்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்ய தொழிலாளர் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாகத் தொழிலாளர் ஆலோ சனைக் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களின் வசதிக்காகவும், அதிக பலன்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

திருத்தப்படும் சட்டத்தின் மூலம் அபராதம் அறவிடும் பொறிமுறை மேலும் வினைத்திறன்மிக்க நிலைக்குக் கொண்டு வரப்படும் என்று தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வர்த்தக வங்கிகளுக்குப் பதிலாக, ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக அதன் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வசதிகளை வழங்க முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர் பில் தற்போதுள்ள சமத்துவமின்மையை நீக்கவும் தீர்மானித்துள்ளதாகத் தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.



# அறிவுப் புதையலைக் காக்கும் படைப்பாளிகள் தினம் இன்று!

**ஜனுக்ஷி ஸ்ரீகாந்தன்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

எந்தவொரு தேசத்தின் அஸ்தி வாரமும் அதன் சிந்தனையில் இருந்துதான் ஆரம்பமாகிறது. அந்தச் சிந்தனைகளுக்கு வடிவமும் உயிரும் கொடுப்பவர்களே எழுத்தாளர்கள்.

நாட்டின் அறிவுச் சொத்துக்களாகவும், சமூக மாற்றத்துக்கான தூண்டு சக்தியாகவும் திகழும் இந்த வார்த்தை வித்தகர்களைப் போற்றுவதற்கான நாளாக ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 1 ஆம் திகதி அன்று தேசிய எழுத்தாளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நாள் இந்திய இலக்கியத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய படைப்பாளிகளை நினைவு கூறுவதாவும் வாசிப்புக் கலாசாரத்தை வளர்ப்பது என்பது ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்பதை உணர்த்துகிறது.

எழுத்தாளர் பணி என்றாலே அது கௌரவம்மிக்கது என்றாலும் கூட அது பல்வேறு சவால்கள் நிறைந்ததே. நூலுக்குப் பின்னால் உள்ள எழுத்தாளரின் உழைப்பும் வலியும் சொல்ல முடியாதவை.

ஒரு எழுத்தாளர் பல இரவுகள் தனிமையிலும் சமூகத்தின் தவறுகளைத் தைரியமாகச் தட்டிக் கேக்கக் கூடிய போராளியாகவும் திகழ்கிறார். பெரும்பாலான இந்திய எழுத்தாளர்கள் குறிப்பாக வட்டார மொழிகளில் எழுதுபவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காகப் பெரும் போராட்டத்தைச் சந்திக்கிறார்கள்.

தரமான எழுத்துக்களுக்கான சரியான அங்கீகாரமும், ஊதியமும் தற்போது கிடைப்பது என்பது சவாலே. இன்றைய டிஜிட்டல் காலத்தில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதாக ஒரு பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இருந்தாலும் அதை சாதகமாகவே எடுத்துக் கொள்கிறார்கள்.

தேசிய அளவில் இந்த நாள் கொண்டாடப்பட்டாலும் தமிழ் இலக்கிய உலகைப் பொறுத்தவரை மகாகவி பாரதியார், புதுமைப்பித்தன், கல்கி போன்ற மகத்தான படைப்பாளிகளின் பாரம்பரியம் இன்றும் பல லட்சம் எழுத்தாளர்களுக்கு ஊக்கமளித்துக் கொண்டுதான் இருக்கிறது.

தமிழ்ப் படைப்புகளும் சமூகச் சீர்திருத்தம், தேசபக்தி மற்றும் வாழ்வியல் தத்துவம் என அனைத்துத் தளங்களிலும் ஆழமான தாக்கத்தை இவை ஏற்படுத்தியுள்ளது. அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியே இன்றைய இளம் படைப்பாளிகள்.

அவர்கள் தங்களின் படைப்புகள் மூலமாகவும் சமூக ஊடகங்களின்மூலமாக தன்பாலீர்ப்பு உரிமை (LGBTQIA+) பருவநிலை மாற்றம் போன்ற நவீனப் பிரச்சினைகளைப் பேசுவதும் இவர்கள் மரபார்ந்த எழுத்து வடிவங்களில் இருந்து விலகி புதிய வடிவங்களில் தங்கள் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர். அத்தோடு இவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதும் எழுதுக் களங்களைப் புரிந்து கொள்வதும் அவசியமான ஒன்று.

தேசிய எழுத்தாளர் தினத்தை ஒரு சடங்காக மாத்திரம் கொண்டாடாமல் அத்தினத்தன்று பிடித்த எழுத்தாளர்களின் புத்தகங்களை வாங்கி அவர்களுக்குப் பொருளாதார ரீதியிலான ஆதரவை வழங்க முடியும் அத்தோடு

வாசிப்பு வாரத்திற்காக மாத்திரம் வாசிப்புக் குழுக்களை அமைக்காது சாதாரண நாட்களிலும் குழுக்களை அமைத்து அது பற்றி விவாதித்து இலக்கியம் பற்றிய அறிவை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.

புத்தகங்கள் நம் கற்பனைத் திறனை வளர்ப்பவையே அவை நம் மனதை விரிவுபடுத்துவதாகவும் கடினமான காலகட்டங்களில் ஆறுதலாகவும் வழிகாட்டியாகவும் அமைகின்றன.நவீன கால எழுத்துக்கள் மின் நூல்கள் மற்றும் ஓடியோ புத்தகங்கள் வடிவில் வாசகர்களைச் சென்றடைகின்றன. ஆனாலும் கூட ஒரு காகிதப் புத்தகத்தை வாசிக்கும் அனுபவத்தின் ஆழத்தை எந்தத் திரையாலும் ஈடு செய்ய முடியாது. என்பதே உண்மை.

வாசிப்பு என்பது மூளையைச் சீராக இயங்க வைக்கக் கூடிய ஒரு அரிய பயிற்சி இந்தத் தேசிய எழுத்தாளர் தினத்தில் எமது படைப்பாளிகளுக்கு மரியாதை செலுத்தி வாசிப்பே நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடக் கூடியது என்ற உறுதி மொழியையும் எடுத்துக் கொள்வோம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2025




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல் திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கி யிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்




இன்று முன்னேற்றகரமான பலன் களைக் காண்பீர்கள்.இன்று புத்துணர்ச்சி யுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணி களை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம்.




பொறுமையான அணுகுமுறையைப் பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பணியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.11.2025




இன்று நீங்கள் பதட்டமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற் கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமை யாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம்.




இன்று பயணம் காணப்படுகின் றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன் கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப் பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என் றாலும் குடும்பத்துக்காகச் சிறிது பணம் செலவு செய்ய நேரும். ஆரோக்கியமான உணவு உட்கொள்வ தன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்கலாம்.

# 2 ட்ரில்லியன் ரூபாவைக் கடந்தது இலங்கை சுங்கத்தின் வருமானம்




இலங்கை சுங்கத்தின் வருமா னம் 2 ட்ரில்லியன் ரூபாவைக் கடந்துள் ளது.

2025 ஆம் ஆண்டிற்கான 2.115 ட்ரில்லியன் ரூபா என்ற வருமான இலக்கை நோக்கி இலங்கை சுங்கம் வெற்றிகரமாக பயணித்து வருவதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

அரசாங்கத்தின் வரி வருமா னத்தை சேகரிக்கும் திணைக்களத் தினால் வரலாற்றில் வருடத்தில் ஈட்டப் பட்ட அதிகூடிய வருமானம் இதுவென சுங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுங்கத்தால் ஈட்டப்பட்ட வருமானத் தில் மோட்டார் வாகனங்கள் மூலம் பெறப் பட்ட 630 பில்லியன் ரூபாயும் இதில் அடங்கும்.

இந்த வருட இறுதிக்குள் வரி வருமான இலக்கை விடவும் அதிகமாக 300 பில்லியன் ரூபாவை வசூலிக்க முடியும் என சுங்கத் திணைக்களம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.